**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 130/2019**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Deposition of Witness for** | | | **PW 1** | | |
| பெயர் | ° | இளங்கோ | தொழில் | ° | சுபேதார் - இந்திய இராணுவம் |
| தந்தை பெயர் | ° | முத்துசுவாமி | வயது | ° | 49 |
| கிராமம் | ° | கொங்கராம்பட்டு | | ° | |
| தாலுக்கா | ° | ஆரணி | | ° | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.02.2026. நேரம் - 1.30**

சாட்சியின் அடையாளம் - ஆதார் அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் மேற்படி கிராமத்தில் வசித்து ராணுவத்தில் சுபேதாரராக பணி புரிந்து வருகிறேன். என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சாட்சி ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

**ஆவணங்கள்**

1. 02.08.2019ம் தேதி நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்,
2. 06.08.2019ம் தேதி 1ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.2** ஆகவும்,
3. 06.08.2019ம் தேதி 2ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.3** ஆகவும்,
4. 06.08.2019ம் தேதி 3ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.4** ஆகவும்,
5. 27.08.2019ம் தேதி பிரதிவாதிகள் எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.5** ஆகவும்,

6. 29.05.1992 தேதியிட்ட எனக்கும், என் தந்தைக்கும் இடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**
**நேரம் 1.45**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni